செ.வெ.. எண்: 001 நாள்: 01.01.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், இன்று (1.1.2017) புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு சிஎச். வித்யாசாகர் ராவ் அவர்களுக்கு மலர்க்கொத்துடன் வாழ்த்துக் கடிதம் அனுப்பி வைத்தார்கள். அந்தக் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:

"I wish to convey my hearty New Year greetings and take this opportunity to convey my best wishes to you."

மாண்புமிகு ஆளுநர் அவர்களும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மலர்க்கொத்துடன் வாழ்த்துக் கடிதமும் அனுப்பி வைத்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (1.1.2017) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தனக்கு வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தனது நன்றியினையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 600 009.